Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 34 · வியாழக்கிழமை Thursday · 04.12.2025 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# மாற்றுத்திறனாளிகளுக்கும் சம வாய்ப்பு வழங்குவதே திராவிட மாடல் அரசு

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை : வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற "உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2025" மற்றும் "உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல்" அறிமுக விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றினார். "அனைத்து மாற்றுத்திறனாளி சகோதர, சகோதரிகளுக்கும் எனது இதயப்பூர்வமான வாழ்த்துகள். உங்களைப் பார்த்தாலே போதும்... பேசாமல் பார்த்துக் கொண்டே இருந்தால் போதும் என்று தோன்றுகிறது" என்று உருக்கமாகத் தொடங்கிய அவர், "மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை கருணை அல்ல உரிமை தான்" என்று திட்டவட்டமாகக் கூறினார்.

இந்த நாள் வெறும் கொண்டாட்ட நாள் மட்டுமல்ல, சம உரிமை வழங்குவதை நினைவுறுத்தும் நாள் என்றும் அவர் வலியுறுத்தினார். தி.மு.க அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்புகளை வழங்குவதில் உறுதியாக இருப்பதாக முதல்வர் தெரிவித்தார். ஒட்டுமொத்த மாற்றுத்திறனாளிகளுக்கும் தன்னம்பிக்கையை உருவாக்கும் விதமாக, உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். இன்னும் 9,000-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் உள்ளாட்சி பிரதிநிதிகளாக நியமிக்கப்பட உள்ளனர்" என்று அறிவித்தார்.

இது இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு மாநில அரசு கொண்டு வந்த சட்டம் என்றும், பிற மாநிலங்கள் இதைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுத் துறையில் சாதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழக அரசுடன் இணைந்து அவர்கள் வரலாறு படைக்கப் போகிறார்கள் என்றும் முதல்வர் உற்சாகம் தெரிவித்தார். மேலும், "மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பட்டா வழங்கப்படுகிறது.

அனைவருக்கும் சம உரிமை உள்ளது என்பதை நிலைநாட்டுவதற்காகவே திராவிட இயக்கம் உருவானது" என்று பெரியார், அண்ணா, கலைஞர் பாரம்பரியத்தை நினைவுகூர்ந்தார். திராவிட மாடல் ஆட்சியில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மேம்பட பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதாகவும் அவர் உறுதியளித்தார்.

விழாவில் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். முதலமைச்சர் அவர்களுடன் நேரடியாக உரையாடி, அவர்களது சாதனைகளைப் பாராட்டினார். "உங்களைப் பார்க்கும் போதே தன்னம்பிக்கை பிறக்கிறது" என்றும் மு.க.ஸ்டாலின் கூறினார்.

# திரிணமுல் காங்கிரசுக்கு பதிலடி கொடுங்கள்: எம்.பி.க்களுக்கு பிரதமர் மோடி உத்தரவு



புதுடில்லி: மேற்கு வங்கத்தில் சட்டசபை தேர்தலுக்கு தயாராகும் வகையில்,திரிணமுல் காங்கிரசுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் அடுத்தாண்டு சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ளது. அங்கு ஆட்சியை தக்கவைக்க அம்மாநிலத்தை ஆளும் திரிணமுல் காங்கிரஸ் முயற்சி செய்கிறது.

இந்த முறை ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியே தீருவது என பாஜ உறுதியாக உள்ளது.

பார்லிமென்ட் குளிர்கால கூட்டத்தொடர் நடைபெறும் நிலையில், அம்மாநிலத்தை சேர்ந்த பாஜ எம்பிக்களை பிரதமர் மோடி சந்தித்தார். அம்மாநிலத்தில் இருந்து பாஜவுக்கு 12 லோக்சபா எம்பிக்களும், 2 ராஜ்யசபா எம்பிக்களும் உள்ளனர்.

இந்த ஆலோசனையின் போது மேற்கு வங்கத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்து விவாதித்த பிரதமர் மோடி தொடர்ந்து கூறியதாவது:எம்பிக்கள் மீதான தாக்குதல் குறித்த சம்பவங்களை தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். அப்போதுதான்திரிணமுல் காங்கிரஸ் கட்சியினர் அரங்கேற்றியுள்ள வன்முறை சம்பவங்கள் மக்களுக்குதெரிய வரும்.

தெளிவான தகவல் பரிமாற்றம் மற்றும் பொது மக்களை சந்திப்பது முக்கியம் என்பதை தற்போதைய சூழ்நிலைகள் காட்டுகின்றன.

களத்தில் நடப்பதற்கு உடனுக்குடன் கட்சியினர் வலிமையாக பதிலளிக்கவேண்டும். 2026 ம் ஆண்டு நடக்கும் சட்டசபைத் தேர்தலுக்கு தயாராவதுடன், கட்சியினரை ஒன்று திரட்டி வலுவான அடித்தளத்தை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் மலை மீது மகா தீபம் ஏற்றப்பட்டது



திருவண்ணாமலை நினைத்தாலே முக்தி தரும் திருத்தலம் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில். சிவபெருமான் அடி,முடி காண முடியாத ஜோதி ரூபமாய் விஸ்வரூபம் எடுத்து நின்றதலம் இது.அக்னி ரூபம் எடுத்த சிவனே திருவண்ணாமலையில் அண்ணாமலையாக வீற்றிருக்கிறார். இதனால் இந்த மலையையே பக்தர்கள் சிவனாகவழிபட்டு வருகின்றனர்.

சிவபெருமான் அக்னி பிழம்பாக நின்ற நாள் கார்த்திகை தீபத் திருநாள் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்திருவிழா விமரிசையாக நடைபெறும்.அவ்வகையில் இந்த ஆண்டின் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24-ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. தினமும் காலையில் விநாயகர், சந்திரசேகரர் வீதிஉலாவும், இரவில் பஞ்சமூர்த்திகள் வீதிஉலாவும் நடைபெற்றது. திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான மகா தீபம் ஏற்றும் நிகழ்வு இன்று (3.12.2025) நடைபெற்றது. மலையில் ஏற்றப்படும் மகா தீபத்திற்கு பயன்படுத்தப்படும் தீப கொப்பரை நேற்றே மலைக்கு கொண்டு செல்லப்பட்டது. மகா தீபம் ஏற்ற பயன்படுத்தப்படும் 4,500 லிட்டர் நெய், காடா துணிகளும் மலைக்கு எடுத்து செல்லப்பட்டன.

மகா தீபம் ஏற்றப்படுவதை முன்னிட்டு அதிகாலையிலேயே கோவில் நடை திறக்கப்பட்டு பஞ்சமூர்த்திகளுக்கு சிறப்பு அபிஷேகம்,அலங்காரம், தீபாராதனை நடைபெற்று அதிகாலை 4 மணியளவில் சாமி சன்னதியில் உள்ள அர்த்த மண்டபத்தில் பரணி தீபம் ஏற்றப்பட்டது. பரணி தீபம் ஏற்றப்பட்டதும் மகா தீபம் ஏற்றுவதற்கான பணிகள் தொடங்கின. காடா துணியில் நெய்யை ஊற்றி அதை திரியாக்கி, கொப்பரையில் திரி- போன்று அடுக்கி வைக்கப்பட்டு பிரமாண்ட தீபம் தயார் செய்யப்பட்டது. மாலையில் பஞ்சமூர்த்திகள் சுவாமி சன்னதி முன்பாக உள்ள தீப தரிசன மண்டபத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்து, மகா தீபத்தை காண மலையை நோக்கி அமர்ந்தார்கள். அதைத்தொடர்ந்து 6 மணிக்கு அர்த்தநாரீஸ்வரர் சுவாமி சன்னதியில் இருந்து ஆனந்த தாண்டவம் ஆடியபடியே தங்க கொடிமரத்தின் முன்னால், மலையை நோக்கியபடி எழுந்தருளி பக்தர்களுக்குகாட்சிதந்தார். ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே காட்சி தருவார் என்பதால், அர்த்தநாரீஸ்வரர் வெளியே வந்ததும் பக்தர்கள் அரோகரா முழக்கமிட்டு அவரை வரவேற்று வணங்கினர். அர்த்தநாரீஸ்வரர் காட்சி தந்ததும் சரியாக மாலை 6 மணிக்கு கொடிமரம் எதிரில் உள்ள அகண்ட தீபத்தில் தீபம் ஏற்றப்பட்டது.அந்ததீபத்திலிருந்து, பஞ்சபூதங்களை குறிக்கும் வகையில் ஐந்து தீப்பந்த ஜோதி ஏற்றப்பட்டு, 2,668 அடி உயர அண்ணாமலையார் உச்சியில் தீபம் ஏற்ற தயாராக இருக்கும் பக்தர்களுக்கு தெரியும்படி உயர்த்தி காட்டப்பட்டது. இதையடுத்து மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது.

# வானிலை முன்னறிவிப்பு: நெல்லை, குமரி உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு கனமழை வாய்ப்பு!



சென்னை: சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் விட்டு விட்டு மிக கனமழை வெளுத்து வாங்கி வரும் நிலையில், நாளை (டிச.4) கிருஷ்ணகிரி, தருமபுரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:நேற்று தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகள் – வடதமிழகம் – புதுவை – தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில், நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், மெதுவாக தென்மேற்கு திசையில் நகர்ந்து, இன்று (டிச.3) காலை 5.30 மணி அளவில், வடதமிழக – புதுவை கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுக் குறைந்து, காலை 8.30 மணி அளவில், அதே பகுதிகளில் நிலவுகிறது. இது, அடுத்த 24 மணி நேரத்திற்கு காற்றழுத்த தாழ்வு பகுதியாக மேலும் வலுக் குறையக்கூடும்.

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டலகீழடுக்குசுழற்சி நிலவுகிறது. இதனால், இன்று (டிச.3) தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, மதுரை, விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மற்றும் புதுவையிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் அவ்வப்பொழுது பலத்த தரைக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

நாளை (டிச.5) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கிருஷ்ணகிரி, தர்மபுரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

டிச.5-ல் தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். டிச.6 முதல் டிச.9 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (டிச.3) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். பொதுவாக வெப்பநிலை 24–26° செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

நாளை (டிச5) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 27–28° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24–25° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கடலூர் அருகே பயிர்களுக்கு இழப்பீடு கேட்டு விவசாயிகள் அரை நிர்வாண போராட்டம்

கடலூர் மாவட்டம் வேப்பூரில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கம் சார்பில் நல்லூர், மங்களூர் ஆகியோர் தலைமையில் விவசாயிகள் அரை நிர்வாண போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக வேப்பூர் தனா, ஹெச்டிஎ:ப்சி வங்கிமாவட்டமேலாளர் (இன்சூரன்ஸ்) நிரஞ்சன், மண்டல துணை வட்டாட்சியர் ஜார்ஜ் பெர்-





ஆகிய வட்டாரங்களில் கடந்த ஆண்டு பயிர்களுக்கு காப்பீடு தொகை வராததை கண்டித்தும், 2025 – 26 ஆம் ஆண்டு கனமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கும் மற்றும் வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கும் நிவாரணம் வேண்டி விவசாய சங்க பிரதிநிதிகள் ராஜா உடையார், ஸ்டாலின், கவியரசு, மணிகண்டன் பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக கண்டன கோஷங்கள் எழுப்பி வட்டாட்சியர் அலுவலகம் வரை வந்தனர். பின்னர், வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தங்களது சட்டையை கழட்டி அறை நிர்வானமாக தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, வேளாண்மை துறை துணை இயக்குனர் கீர்த்தனா, ... னான்டோ மற்றும் வேப்பூர் போலீசார் சமாதான பேச்சு வார்த்தை நடத்தினர். பின்னர் காப்பீடு தொகையைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்ததால் போராட்டத்தை கைவிட்டு விவசாயிகள் கலைந்து சென்றனர். இதனால் வட்டாட்சியர் அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பான சூழல் நிலவியது.

# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் சர்வதேச மாற்று திறனாளிகள் தின நிகழ்ச்சி

தேவகோட்டை – சிவகங்கை மாவட்டம் தேவ- விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் தமிழக களை ஆசிரியர் ஸ்ரீதர் செய்து இருந்தார்.நிறை-



கோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் சர்வதேசமாற்றுதிறனாளிகள் தின நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வந்தவர்களை ஆசிரியர் ஸ்ரீதர் வரவேற்றார்.பள்ளி தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில் அரசின் ஒற்றுமையை வளர்ப்போம் என்கிற உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாணவர்களிடையே மாற்று திறனாளிகளுக்கு உதவும் எண்ணங்களை ஏற்படுத்தி கொள்ளவும், அவர்களை சகோதர்களாக எண்ணி உதவவும் வகையிலும் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு ஏற்பாடு- வாக ஆசிரியை முத்துமீனாள் நன்றி கூறினார்.மாணவர்களை மகிழ்விக்கும் வண்ணம் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

மாற்று திறனாளி மாணவர்களுக்கு எவ்வாறு உதவலாம்,அவர்களுக்கு உள்ள சிரமங்கள் என்ன என்பதை மாணவர்களின் மூலம் நாடகமாக நடித்து காண்பிக்கப்பட்டது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பூ.மாம்பாக்கம் மேப்புலியூர் நாச்சியார்பேட்டை கிள்ளனூர் உட்பட பல்வேறு பகுதிகளிலும் பரவலாக கடந்த இரண்டு நாட்களாக விட்டுவிட்டு கனமழை பெய்து வருகிறது இதனால் விவசாய நிலங்களில் தேங்கிய மழைநீர் பூ.மாம்பாக்கம் கிராமத்தில் உள்ள ரயில்வே சுரங்கப்பாதையில் சுமார் 5 அடி உயரத்திற்கு தேங்கி நிற்கிறது இதனால் உளுந்தூர்பேட்டையில் இருந்து பூ.மாம்பாக்கம் மேப்புலியூர் கன்னியாங்குப்பம் வெங்கடேசபுரம்பத்துக்குமேற்பட்டகிராமங்களுக்குபோக்குவரத்துநிறுத்தப்பட்டுள்ளது மேலும் இந்த சுரங்கப் பாதையின் இருபுறமும் கயிறுகள் கட்டியும் முட்களை வெட்டி போட்டும் போக்குவரத்து தடை விதிக்கப்பட்டுள்ளது சுமார் 5 அடி உயரத்திற்கு தண்ணீர் நிற்பதால் அதனை அகற்ற வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர் பொதுமக்களின்கோரிக்கையைஏற்றுஉளுந்தூர்பேட்டைதொகுதிசட்டமன்றஉறுப்பினர் மணிகண்ணன் மற்றும் ஊரக வளர்ச்சி அதிகாரிகள் இன்று நேரில் பார்வையிட்டு ராட்சத ஜெனரேட்டர்கள் மூலம் சுரங்கப்பாதையில் தேங்கிய மழை நீரை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்...



எழுதல்மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் .பி.மூர்த்தி அவர்கள் மதுரை தமுக்கம் மைதானத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்ட இந்தியாவின் பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட மதி கண்காட்சி (SARAS மேளா) மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சி நிறைவு விழாவில் கைவினைப் பொருட்களை அதிக விற்பனை செய்த சுய உதவிக் குழுக்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் உடன் உள்ளார்.

# தென்காசி தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தின் சார்பில் கிறிஸ்துமஸ் கீத பவனி தொடங்கியது





பாளையங்கோட்டை மறை மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற தென்காசி தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தின் சார்பில் கிறிஸ்துமஸ் கீத பவனி நேற்று மாலை தொடங்கியது.

கிறிஸ்துமஸ் கீத பவனி (கேரல்ஸ்) என்பது ஒவ்வொருவரின் இல்லத்திலும் உள்ளத்திலும் இயேசு பாலன் பிறக்க போகிறார் என்ற நற்செய்தியை அறிவிப்பது தான் கிறிஸ்துமஸ் கீத பவனியின் நோக்கமாகும்.இது கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களின் முக்கிய பகுதி ஆகும். இந்த கிறிஸ்துமஸ் கீத பவனியானது டிசம்பர் 02ம் தேதி தொடங்கி 20ம் தேதி வரை நடைபெற இருக்கிறது. இத்திருத்தலத்தில் 29 அன்பியங்கள் உள்ளன. நிகழ்ச்சியின் தொடக்க மாக நேற்று மாலை உண்மை, அல்போன்சா அன்பிய குடும்பங்களின் ஒவ்வொரு இல்லங்களிலும் கிறிஸ்துமஸ் கீத பவனி நடைபெற்றது.

கிறிஸ்துமஸ் கீத பவனியை தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தின் அதிபரும் பங்குத் தந்தையுமான அருட்பணி. ஜேம்ஸ் அடிகளார் தொடக்க ஜெபம் செய்து கீத பவனியினை தொடங்கி வைத்து வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

தொடர்ந்து அன்பிய குடும்பங்களின் இல்லத்திற்கு செல்லும்போது கிறிஸ்துமஸ் பாடல்கள் பாடிக் கொண்டு உற்சாகமாக இறைமக்கள் சென்றனர். அங்கு தென்காசி மிக்கேல் அதிதூதர் திருத்தலப் பங்கின் உதவிப் பங்குத் தந்தை அருட்பணி. ஜியோ சந்தனம் அடிகளார் தலைமையில் ஜெபம் செய்து கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்து 2026 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி மற்றும் இனிப்புகள் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது.

இந்த கீத பவனியில் அமலவை அருட்சகோதரிகள், இளையோர் இயக்கத்தினர், திருத்தல கிறிஸ்துமஸ் கீத பவனி தன்னார்வ குழு உறுப்பினர்கள், அன்பிய பொறுப்பாளர்கள், உண்மை, அல்போன்சா அன்பிய இறைமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# போரால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் 54 ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம்

காசா,

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.மேலும்,இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து,ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தியது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டது. 2 ஆண்டுகள் நடந்த போரில் காசாவில் 70 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இந்த போரால் காசா முழுவதுமாக உருக்குலைந்து போனது. லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து உணவுக்காக தவிக்கும் நிலைக்கு



தள்ளப்பட்டுள்ளனர். காசாவில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி சூழலை கருத்தில் கொண்டு போரை முடிவுக்குகொண்டுவர இஸ்ரேலுக்கு சர்வதேச நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் முயற்சியால் கடந்த அக்டோபர் 10-ந்தேதி இஸ்ரேல், ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இதனை தொடர்ந்து, காசா மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்க ஐ.நா. சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இந்த நிலையில், போரால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் 54 ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம் நடைபெற்ற சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காசாவின் கான் யூனிஸ் பகுதியில், வெடிகுண்டு தாக்குதல்களால்சேதமடைந்தகட்டிட இடிபாடுகளுக்கு நடுவே மேடை அமைக்கப்பட்டு, ஒரே நேரத்தில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 54ஜோடிகளுக்கு உற்சாகமாக திருமணம் நடைபெற்றது. மணமக்கள் தங்கள் கையில் பாலஸ்தீன கொடிகளை ஏந்தியிருந்தனர். அங்கு திரண்டு வந்திருந்த பொதுமக்கள் திருமண ஜோடிகளை வாழ்த்தி மகிழ்ந்தனர்.


# வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் / ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# ஈரோடு மாவட்டம் சோலார் பகுதியில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம் இயக்கப்பட்டது

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ஈரோடு மாவட்டம் சோலார் பகுதியில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம் 26.11.2025 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கரூர்.





மதுரை, வெள்ளகோவில் மார்க்கங்களில் செல்லும் அனைத்து பேருந்துகளும் 04.12.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணி முதல் சோலார் புதிய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படவுள்ளது என்பதை பொதுமக்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அவ்வாறே மதுரை திருச்சியில் இருந்து கரூர் மார்க்கமாகவும் மற்றும் வெள்ளகோயில் மார்க்கமாகவும் ஈரோடு வருகின்ற பேருந்துகள் சோலார் பேருந்து நிலையத்திற்கு வந்து சேரும் வகையில் இயக்கப்படும். சோலார் பேருந்து நிலையத்திலிருந்துஈரோடுமத்தியபேருந்துநிலையம் மற்றும் அதனைத் தாண்டி பயணிக்கும் பயணிகளுக்கும் மற்றும் ஈரோடு மத்திய பேருந்து நிலையத்திலிருந்து கரூர் மார்க்கமாகவும் மற்றும் வெள்ளகோயில் மார்க்கமாகவும் பயணிக்கும் பயணிகள் சோலார் பேருந்து நிலையம் வருவதற்கும் நகர பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும் சோலார் பேருந்து நிலையத்திலிருந்து ஈரோடு நகரத்திற்குள் வருவதற்கு போதுமான ஆட்டோ மற்றும் டாக்ஸிகள் சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# தென்காசி அரசு வழக்கறிஞர் அரிவாளால் வெட்டி கொலை; ஓமலூர் தாலுகா வழக்கறிஞர் சங்கத் தலைவர் கடும் கண்டனம்



தென்காசி அரசு வழக்கறிஞர் முத்துக்குமாரசாமி செங்கோட்டை நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். தென்காசி கூலி கடை பஜாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்தே மர்ம நபர்கள் அறிவாளால் வெட்டிவிட்டு தப்பி உள்ளனர். உடனடியாக அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் வழக்கறிஞர் முத்துக்குமாரசாமி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.இதற்குசேலம்மாவட்டம்ஓமலூர் தாலுகா வழக்கறிஞர் சங்கத் தலைவர் P.S.சுந்தர்ராஜன் அவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

சுந்தர்ராஜன் கூறியதாவது வழக்கறிஞர் தொழில் என்பதுஒருசேவைத்தொழில்அவர்அவர்அவர்களது வழக்குசார்ந்தவாதங்களைநீதிமன்றத்தில்சட்டத்தின் முன் முன்வைக்கின்றனர்.அரசு வழக்கறிஞர் அவர்கள் கட்சிக்காரரர் வழக்கிற்காக வாதாடுகிறார். எதிர்த்தரப்பினர் அவர்களது வழக்கறிஞர் மூலமாக சட்டத்தின் முன் நிரூபித்து நீதியை பெற வேண்டுமே தவிர வன்முறையை கையாள்வது எந்த வகையிலும் சரியானதுஅல்ல.இதேநிலைநீடித்தால்தமிழ்நாட்டில் வழக்கறிஞர்களுக்கு பாதுகாப்பு என்ற ஒன்று இல்லாமலேயே போய்விடும். வழக்கறிஞர்கள் தங்களது கட்சிக்காரரர்களுக்காக சுதந்திரமாக வழக்காடும் நிலை இல்லாமல் போய்விடும். வழக்கறிஞர் தாக்குதல் என்பது தமிழ்நாட்டில் தொடர்கதையாக இருந்து வருகிறது இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால். உடனடியாகதமிழ்நாடு அரசு வழக்கறிஞர்பாதுகாப்பு சட்டத்தை இயற்ற வேண்டும். தென்காசி அரசு வழக்கறிஞர் அருவாளால் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் கடும் கண்டனத்திற்குரியது.



தேசிய மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நாமக்கல் மாவட்டம் நல்வாழ்வு சங்கம் மாவட்ட செயலாளர் திரு. பராசக்தி அவர்களின் ஏற்பாட்டில் குமாரபாளையம் பேருந்து நிலையத்தில் நாமக்கல் மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் தலைவர் ராமதாஸ் மோகனூர் மற்றும் நில முகவர் தலைவர் திரு.சின்னச்சாமி, சமூக ஆர்வலர் சித்ராபாபு, பாச இல்லம் அறக்கட்டளை நிறுவனர் திரு.குமார் அவர்கள் தலைமையில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ராவ், ரவி,புஷ்பராஜ், சீனிவாசன், ராமு, சித்ரா,சுமதி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வு சிறப்பான முறையில் நடைபெற்றது.

# திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கார்த்திகை தீபத் திருவிழா தேரோட்டம்



மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோயிலில் கார்த்திகை தீபத் திருவிழா 10 | நாட்கள் நடைபெறும். இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 25-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இவ்விழாவினை முன்னிட்டு சுப்பிரமணிய சுவாமி தெய்வானையுடன் தினமும் காலையில் தங்கச் சப்பரத்திலும் மாலையில் தங்கமயில் வாகனம், தங்க குதிரை வாகனம், வெள்ளி பூத வாகனம், வெள்ளி ஆட்டுக்கடா வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தேரோட்டம் விழாவில் பங்கேற்று தேரை வடம் பிடித்து இழுத்தனர்

இவ்விழாவின் சிகர நிகழ்ச்சியாக இன்று காலை7:30மணியளவில் தேரோட்டம்துவங்கியது. இதில் பங்கேற்பதற்காக திருப்பரங்குன்றம், திருமங்கலம், கள்ளிக்குடி, அதனை சுற்றியுள்ள கிராமபகுதியைச்சேர்ந்த பொதுமக்கள் மேலும் விருதுநகர், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேற்று இரவு திருப்பரங்குன்றம் கோயிலுக்குபாதையாத்திரையாக வந்தடைந்தனர். அவர்கள் இன்று காலையில் தேரோட்டம் விழாவில் பங்கேற்று தேரை வடம் பிடித்து இழுத்தனர். இந்த சிறிய வைர தேரானது ரத வீதிகளில் மட்டும் உலா வந்தது.

திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்

முன்னதாக சுப்ரமணியசாமி தெய்வானையுடன் சிறப்பு அலங்காரத்தில் 16 கால் மண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சிறிய வைர தேரில் எழுந்தருளினார்.

அங்கு பக்தர்கள் வடம் பிடிக்க ரத வீதிகள் வழியாக தேர் பவனி வந்தது கண்கொள்ளாக் கட்சியாக இருக்கும். தொடர்ந்து இன்று மாலை 6 மணி அளவில் கோயிலில் பாலதீபம் ஏற்றப்பட்டு மலை மேல் மகா தீபம் ஏற்றப்படும். இதற்காக திருவண்ணாமலை பகுதியில் இருந்து வல்லுனர் குழுவினர் வந்து தீபம் ஏற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்தனர். தொடர்ந்து இரவு சுப்பிரமணிய சுவாமி தெய்வானையுடன்தங்கமயில் வாகனத்தில் எழுந்தருளி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியாக நாளை தீர்த்த உற்சவம் நடைபெறும். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் செய்து வருகிறது.

# சேவை செய்யும் மகளிர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா நம் பாரத சேவை தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் நடந்தது

சேவை செய்யும் மகளிர்களுக்கு விருதுகள் வழங்கும்விழாநம்பாரத சேவை அமைப்பின் சார்பில் நிறுவனர் பாலசரவணன் தலைமையில் நடந்தது. ரத்த தேவைக்கு உதவுதல், உடல்உறுப்புதானம் பெறவைத்தல், கண் தானம் செய்தல், ஆதார், ரேசன்கார்டு, வாக்காளர் அடையாள அட்டை பெறுதல், பெயர் திருத்தம் செய்ய உதவுதல், மருத்துவ காப்பீடு மூலம் ஏழை எளியவர்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்ய உதவுதல், வடிகால் பராமரிப்பு




சாலை வசதி மேம்படுத்துதல், பேருந்துகள் இல்லாத பேருந்து வசதி ஏற்படுத்திதரகோரிக்கை விடுத்தல் என்பது உள்ளிட்ட பல்வேறு சேவைகள் செய்து வரும் குமாரபாளையம் சமூக ஆர்வலர்கள் சித்ராபாபு, மல்லிகா சேவையை பாராட்டி திரைப்பட காமெடி நடிகர் தாமு,ராமசுப்ரமணி IPS உள்ளிட்ட பலர் விருது வழங்கி, தங்கப்பதக்கம் மற்றும் சால்வை அணிவித்து பாராட்டி பேசினார்கள். மேலும் மதுரை,பாண்டிச்சேரி, தருமபுரி,கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், நாமக்கல், சென்னை பகுதியில் உள்ள 500மகளிர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

# கோவை மாவட்டம், ஒண்டிப்புதூர் பகுதியில், சுமார் 13 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமான உலகத்தரம் வாய்ந்த இயற்கை முறையில் ஜவுளி துணிகளுக்கு வண்ணமிடம் நிறுவனம் துவக்கவிழா





கோவை மாவட்டம், ஒண்டிப்புதூர் காமாட்சிபுரம் அடுத்த ஆவாரம்பாளையம் சகோதரியா சங்க வளாகத்தில் சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஆயுர் வஸ்திரா இணைந்து சுமார் 13 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமான உலகத்தரம் வாய்ந்த இயற்கை முறையில் ஜவுளி துணிகளுக்கு வண்ணமிடம் நிறுவனத்தை ஆவாரம்பாளையம் சர்வோதயா சங்க செயலாளர் சிவகுமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, இயற்கை முறையில் உற்பத்தியாகும் சேலைகளின் பணிகளை துவக்கி வைத்தார், சில்க் வில்லேஜ் கைத்தறி நிறுவன த்தின் வலைதளத்தை திறந்து வைத்தார், இந்நிகழ்வில் சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் கைத்தறி முருகேசன், ஸ்கை சில்க் மற்றும் எஸ்.ஜி.வி குழும நிறுவனர் பழனிவேல் பரமேஸ்வரி, ஆலோசகர் ராஜாராம்,ஆயுர் வஸ்தரா நிறுவனர் தங்க குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பெருந்துறை, திங்களூர் ஊராட்சி மற்றும் பெத்தாம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்



ஈரோடு மாவட்டம் பெருந்துறை,திங்களூர் ஊராட்சி மற்றும் பெத்தாம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நேற்று (03.12.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திங்களூர் துணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளான சொத்து ஆவணங்கள், சான்றளிக்கப்பட்ட பிரதிகள், வில்லங்கச் சான்றிதழ்கள், இதர மற்றும் வைப்புத்தொகைப் பதிவுகள், விற்பனைப் பத்திரங்கள் உள்ளிட்ட கோப்புகள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் பொதுமக்களுக்கு விரைவான சேவையினை வழங்கவும், அலுவலகத்தின் சுற்றுப்புறத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திங்களூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் தானியங்கி மழையளவு பதிவு நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு அதன் செயல்பாடுகள், அப்பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள மழைப்பொழிவின் அளவு, சராசரி குறித்தும் கேட்டறிந்தார். மேலும், அதே பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதி திட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் நாற்றுப்பண்ணையினை பார்வையிட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள நாற்று வகைகள்,நாற்றுகளின் வளர்ச்சி, வழங்கப்படும் ஊட்டச்சத்து உரங்கள், அவற்றின் பராமரிப்புஆகியசெயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த நாற்றுப்பண்ணையில் பூவரசு, மலை வேம்பு, வேம்பு, புங்கன், புளி, கொடுக்காப்புளி உள்ளிட்ட 16 வகையான செடிகள் வளர்க்கப்பட்டு வருகிறது. தற்போது மழை காலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதி திட்ட பணியாளர்களை கொண்டு ஏரி மற்றும் சாலையோரப் பகுதிகளில் நாற்றுகள் நடப்பட்டு வருகிறது.

அதனைத்தொடர்ந்து, பெத்தாம்பாளைம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு உணவின் சுவை குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, அவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளின் போது, துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.




# மாடுகளை சாலையில் திரியவிட்டால் மாடுகள் வளர்க்கும் உரிமம் ரத்து செய்யப்படும் என்று மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்

தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் வடக்கு மண்டல அலுவலகத்தில் பொதுமக்கள்குறைதீர்க்கும் முகாம் மேயர்ஜெகன் பெரியசாமி தலைமையில்,ஆணையர்பிரியங்கா முன்னிலையில நடைபெற்றது.

முகாமில் மேயர் பேசியதாவது: தூத்துக்குடி மாநகரத்தில் வடக்கு மண்டலத்தில் 18வது முகாம் நடக்கிறது இதுவரை838மனுக்கள் பெறப்பட்டு 835 மணிக்கு தீர்வு காணப்பட்டுள்ளது வடக்கு மண்டலத்தில்மழைநீர்கள் 50% தேங்கி நிற்கிறது. இதை அதிக திறன் கொண்ட மோட்டார்கள் மூலம் அகற்றும் பணி நடந்து வருகிறது. மீதமுள்ள வாடுகளில்எவ்வளவுமழை பெய்தாலும் ஒரு மணி நேரத்தில் தண்ணீர் செல்லும் வழியில் பாதாள சாக்கடை வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் 7, 8வது வார்டுகள் கடற்கரை ஒட்டி இருப்பதால் அப்பகுதியில் தண்ணீர் விரைவாக அகற்ற முடியவில்லை. தண்ணீர் தேங்கியுள்ளது. இந்த தண்ணீரை அதன் உரிமையாளர்கள் அகற்ற வேண்டும். சாலைகளில் திரியும் மாடுகள் கோசலையில் அடைக்கப்பட்டு, உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் தொடர்ந்து மாடுகளை சாலையில் திரியவிட்டால் மாடுகள் வளர்க்கும் உரிமம் ரத்து செய்யப்படும். ஜனவரி 10 ஆம் தேதி வரை மழைக்காலம் இருப்பதால் அதன் பின் மழையால் சேதமடைந்தரோடுகள் சீரமைக்கநடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், துணை ஆணையர் சரவணகுமார், சுகாதார அலுவலர் சரோஜா சுகாதார ஆய்வாளர் ராஜபாண்டி, மண்டலதலைவர் நிர்மல் ராஜ் மேயர் நேர்முக உதவியாளர் ரமேஷ், பிரபாகர், ஜேஸ்பர் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# 3.5 ஆண்டுகளில் பழநி தேவஸ்தானத்துக்கு சொந்தமான ரூ.1,316 கோடி சொத்துகள் மீட்பு!



பழநி: கடந்த மூன்றரை ஆண்டுகளில் 467 ஆக்கிரமிப்பாளர்களிடம் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பில் இருந்த பழநி தேவஸ்தானத்துக்கு சொந்தமான ரூ.1,316 கோடி சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர்.தைப்பூசம், பங்குனி உத்திரம் உள்ளிட்ட திருவிழா காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். பழநி தேவஸ்தானத்துக்கு சொந்தமான நிலங்களையும், கட்டிடங்களையும் பல ஆண்டுகளாக தனியார் பலர் ஆக்கிரமித்து இருந்தனர். இந்தச் சொத்துகளை மீட்கும் முயற்சியில் தேவஸ்தானம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அதன்படி, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு 2.4 கி.மீ. தூரமுள்ள கிரிவலப்பாதையில் பக்தர்களுக்கு இடையூறாக இருந்த ஆக்கரிமப்பு கடைகள், குடியிருப்புகள், கட்டிடங்கள் அகற்றப்பட்டு ரூ.156 கோடி மதிப்பிலான 329 சொத்துகள் மீட்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, திண்டுக்கல், தேனி, கோவை, திருப்பூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பில் இருக்கும் சொத்துகளை மீட்டு வருகின்றனர். அந்த வகையில் 2022 மே 9 முதல் புதன்கிழமை (டிச.3) வரை கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஆக்கிரமிப்பில் இருந்த 137.95 ஏக்கர் நிலங்கள், 8.52 லட்சம் சதுர அடி மனைகள் மற்றும் 86 ஆயிரத்து 943 சதுர அடி கட்டிங்கள் மொத்தம் 467 ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்டு ள்ளது. இதன் சொத்து மதிப்பு ரூ.1,316 கோடி என பழநி கோயில் இணை ஆணையர் மாரிமுத்து தெரிவித்துள்ளார்



ஈரோடு மாவட்டம் நம்பியூர் அருகே மலையப்பாளையம் உதயகிரி முத்து வேலாயுத சுவாமி கோவிலில் உலக நன்மைக்காக 108 சங்காபிஷேகம் நடைபெற்றது. ஆலய அர்ச்சகர் பிரவீன் குமார் குருக்கள் நடத்தி வைத்தார். இதை தொடர்ந்து முருகனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் செய்து பூஜை நடைபெற்றது.இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



ஈரோடு மாநகராட்சி, அரசு தலைமை மருத்துவமனையில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (02.12.2025)அன்றுநேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.


இந்த ஆய்வின்போது, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், மருந்தகம், மருந்து இருப்பு, ஆய்வகம், அவசர சிகிச்சை பிரிவு, படுக்கை வசதி, கழிப்பறை, புற மருத்துவ பயனர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறை, சமையலறை, வாகன நிறுத்துமிடம், சுற்றுப்புறத்தூய்மை குறித்து ஆய்வு மேற்கொண்டு,மருத்துவ பயனர்களுடன் மருத்துவர்கள் வழங்கும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும், மருத்துவ தினசரி வருகை தரும் மருத்துவ பயனர்கள் விபர பதிவேடு,மருத்துவ கருவிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பயன்பாடு, மருத்துவ பணியாளர்கள் விபரம், பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட விபரம் மற்றும் தொடர் கண்காணிப்பு பணிகள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டு மருத்துவமனை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்குமாறு மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, இணைஇயக்குநர்(நலப்பணிகள்) பொ மரு. வெங்கடேஷ் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



தாய்லாந்து நாட்டில் பட்டாயா, சத்தாஹிப் சொன்புரியில் 27.11.2025 முதல் 30.11.2025 வரை நடைபெற்ற UWSFF உலக பவர்லிஃப்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா நாட்டின் சார்பில் தமிழ்நாடு அமெச்சூர் பவர்லிஃப்டிங் அசோசியேஷன்மூலமாக ஈரோடு மாநகர் சூரம்பட்டி பகுதியை சேர்ந்த டி.திவாகர்56கிலோஎடைபிரிவில்வெயிட்லிஃப்ட் 185 கிலோ தூக்கி முதலிடம் பெற்று சாதனை நிகழ்த்தி உலக அரங்கில் இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார்.ஈரோடு மாநகருக்குவருகைதந்தபிறகுதமிழ்நாடுவீட்டுவசதி மற்றும்நகர்ப்புறவளர்ச்சித்துறை,மதுவிலக்குஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களை நேரில் சந்தித்து பதக்கம் மற்றும் சான்றிதழ் காண்பித்து வாழ்த்து பெற்றார்.இந்த நிகழ்வில் ஈரோடு மாநகராட்சி 47 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தகோபு மற்றும் பலர் உடனிருந்தனர். பொதுமக்கள்,விளையாட்டு வீரர்கள் என பலரும் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (03.12.2025) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று மனு மீது விசாரணையை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# ஈரோடு மாவட்டம் உள்ளாட்சி அமைப்புகளில் 47 மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பேச்சு






ஈரோடு மாவட்டம், கூரபாளையம், நந்தா இயன்முறை கல்லூரியில் நேற்று (03.12.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவினை முன்னிட்டு, மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடைபெற்றபல்வேறுபோட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

உலக மாற்றுத்திறனாளிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 அன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது. முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு என ஒரு துறையாய் உருவாக்கி அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு அடையாள அட்டை பெற்று தருவதோடு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு கல்வி கற்க வசதி, திருமண உதவித்தொகை, உதவி உபகரணங்கள், கல்வி உதவித்தொகை, வேலைவாய்ப்பு என மற்றவர்களை போன்று இயல்பான வாழ்க்கை வாழ அனைத்து உதவிகளையும் அளிக்க ஏற்பாடு செய்தார்கள். மேலும், தேவைக்கேற்ப அவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவது,படிப்பதற்கான சிறப்புப்பள்ளிகள், வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குவது என பல்வேறு உதவிகள் செய்யவும் ஏற்பாடு செய்தார்கள். தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு உலக வங்கியுடன் இணைந்து மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்கு தேவைப்படும்அனைத்து சேவைகளுக்கும் மாவட்ட தலைமையிடத்திற்கு வருகைபுரியாமல் அவர்கள் வசிக்கும் வட்டாரத்திலேயே பெற்றுக் கொள்ளும் வகையில் ஒன் ஸ்டாப் சென்டர் அமைத்தும், மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பு நடத்தி, மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை, அவர்களின் மாற்றுத்திறன், என்ன வகையான உதவிகள் தேவைப்படுகிறது தற்போது வரை 24,898 நபர்களுக்குதனித்துவம் வாய்ந்த தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித்தொகை ரூ.2000/-வழங்கும்திட்டத்தின் கீழ் 2025-2026-ஆம் நிதியாண்டில் 288 பயனாளிகளை புதியதாக தேர்வு செய்யப்பட்டு மொத்தமாக 7623 பயனாளிகளுக்கு ரூ.1.52 கோடி மதிப்பிலான பராமரிப்பு உதவித் தொகை ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது. அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள் (High Support Need) தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக்கொள்ள ஏதுவாக மாதம் ரூ.1000/- வீதம் 705 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு 25 வகையான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 1140 நபர்களுக்கு ரூ.3.45 கோடிமதிப்பீட்டிலான உதவி உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது. கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 134 நபர்களுக்கு ரூ.10.98 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. திருமண உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 9 நபர்களுக்கு ரூ.4.25 இலட்சம் அதனுடன் சேர்த்து 9 நபர்களுக்கு 8 கிராம் தங்கநாணயமும்வழங்கப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்களுக்கு சம்பள மானியம் மற்றும் உணவூட்டு மானியமாக ரூ.86.97 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டவுள்ளது. ஆவின் பாலகம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ. 1,00,000/-மதிப்பில் வழங்கப்பட உள்ளது. பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் உடல் இயக்க மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச பயணச்சலுகை வழங்கும் திட்டத்தின் கீழ் 275 பயனாளிகளுக்கு வருடம் முழுவதும் பயணம் மேற்கொள்ள இலவச பயணச்சலுகை (Bus Pass) வழங்கப்பட்டுள்ளது.

கொண்டதில், 210 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள்,ஓவியப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற23மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,14,400/- வீதம் ரூ.2,28,800/-மதிப்பீட்டில் தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். இவ்விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்கடாசலம் (அந்தியூர்), உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிறப்புப்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# Commandos, Snipers, Drones, AI: 5Layer Security Ring For Putin In India






*New Delhi:*

*Highly trained personnel from Russia's Presidential Security Service, top commandos from India's National Security Guard, snipers, drones, jammers, and AI monitoring - a five-layer security ring has been prepped ahead of Russian President Vladimir Putin's visit to India.*

*Putin, who is visiting India to attend the India-Russia Annual Summit at the invitation of Prime Minister Narendra Modi, is expected to land in Delhi tomorrow evening. According to sources, the Russian President will dine with the Prime Minister. He will receive a ceremonial welcome at Rashtrapati Bhavan the day after. Later on Friday, he is scheduled to visit Mahatma Gandhi's memorial in Raj Ghat .Putin will then attend the summit at Hyderabad House and an event at Bharat Mandapam. He will also participate in a banquet hosted by President Droupadi Murmu at the Rashtrapati Bhavan.*

*To ensure top security during the action-packed itinerary, over four dozen top security personnel from Russia reached Delhi beforehand, sources have said.*

*Along with officials of Delhi Police and the NSG, these officials are sanitising every route the Russian President's cavalcade will pass through. Specialised drones will ensure that a control room set up for the President's security has eyes on his cavalcade at all times. Several snipers will cover the route of the President's movement. Jammers, AI monitoring and facial recognition cameras are some of the equipment in the massive tech deployment for Putin's security.*

*According to sources, a five-layer security ring has been planned, and each of them will become active as soon as Putin lands. Everyone in the security detail will be in constant touch with the control room.*

*NSG and officers of Delhi Police will be part of the outer layers of security, while the Russian Presidential Security will handle the inner layers. When the Russian President is with Prime Minister Modi, commandos from India's Special Protection Group, which protects the Prime Minister, will join the inner security ring.*

*The hotel in which Putin will stay has also been thoroughly sanitised. Russian security officials are conducting checks at places Putin is scheduled to visit. Also, a list of potential impromptu destinations has been prepared, and these areas are also being scanned A big highlight of Putin's security detail is the Aurus Senat, a heavily armoured luxury limousine which the Russian President uses. The Senat is being flown in from Moscow for Putin's India trip. Interestingly, the Russian President rode with Prime Minister Modi in the Senat during the Shanghai Cooperation Organisation summit in China earlier this year.*

*Often called a 'fortress-on-wheels', the Senat is a full-size luxury limousine developed by Russian automaker Aurus Motors. Introduced in 2018, the Senat is Putin's official state car and is part of the "Kortezh" project, a Russian programme to build domestic luxury and armoured vehicles for the government's use.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.